# திறந்த மின்சாரச் சந்தை

பயனீட்டாளர்கள் கூடிய விரைவில், தங்களுக்கு விருப்பமான மின்சார விற்பனையாளரைத் தேர்ந்தெடுத்து, முன்பு இருந்த அதே நம்பகமான மின்சார விநியோகத்தைப் பெறலாம். நீங்கள் விரும்பும் மின்சார சேவையைத் தேர்ந்தெடுங்கள்.

## திறந்த மின்சாரச் சந்தையைப் பற்றிய 5 முக்கியமான தகவல்கள்

நாம் அன்றாடம் பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசிகள், கணினிகள், குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற சாதனங்கள் பலவும் மின்சாரத்தில் இயங்குகின்றன. இன்று, எல்லா குடும்பங்களும் சிறுதொழில்களும் எஸ்பி குழுமத்திடமிருந்து (SP Group) மின்சாரம் வாங்குகின்றன. திறந்த மின்சாரச் சந்தையின் அறிமுகத்துடன், நீங்கள் கூடிய விரைவில் உங்கள் விருப்பப்படி மின்சார விற்பனையாளரைத் தேர்ந்தெடுக்கலாம்.

### 1 உங்கள் விருப்பப்படி தேர்ந்தெடுக்கலாம்

நீங்கள் உங்களது தேவைகளுக்கு ஆகப் பொருத்தமான விலைத் திட்டத்தில் மின்சார விற்பனையாளரிடமிருந்து மின்சாரம் வாங்கலாம், அல்லது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தில் எஸ்பி குழுமத்திடமே தொடர்ந்து மின்சாரம் வாங்கலாம். மின்சார விற்பனையாளருக்கு மாறிச் செல்வதற்குக் காலக்கெடு எதுவும் இல்லை என்பதால், உங்களுக்கான தெரிவுகளைப் பற்றி மேலும் தெரிந்து கொண்ட பிறகு தீர்மானம் எடுக்கலாம்.

### 2 புதிய விற்பனையாளர்கள், முன்பிருந்த அதே மின்சார விநியோகம்

நீங்கள் மின்சார விற்பனையாளரிடம் மின்சாரம் வாங்கினாலும், உங்களது மின்சார விநியோகத்தில் மாற்றமிருக்காது. ஏனெனில், எஸ்பி குழுமமே தேசிய மின் கட்டமைப்பைத் தொடர்ந்து இயக்கி, அனைவருக்கும் மின்சாரம் விநியோகிக்கும்.

### 3 மின்சார விற்பனையாளருக்கு மாறிச் செல்வது கட்டாயமில்லை

நீங்கள் மின்சார விற்பனையாளருக்கு மாறிச் செல்வது கட்டாயமில்லை. நீங்கள் எப்போதும் செய்வது போலவே தொடர்ந்து எஸ்பி குழுமத்திடமிருந்து ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தில் மின்சாரம் வாங்கலாம். நீங்கள் மேற்கொண்டு எதுவும் செய்யத் தேவையில்லை.

### 4 விற்பனையாளருக்கு மாறிய பிறகும் யு-சேவ் கழிவுகளைப் பயன்படுத்தலாம்

நீங்கள் யு-சேவ் (U-Save) கழிவுக்குத் தகுதி பெற்றால், விற்பனையாளருக்கு மாறிய பிறகும் மின்சாரக் கட்டணத்தை ஈடுசெய்ய யு-சேவ் கழிவுகளைப் பயன்படுத்த முடியும்.

### 5 விற்பனையாளருக்கு மாறிச்செல்வது எளிது

உங்களுக்கு விருப்பமிருந்தால் மின்சார விற்பனையாளருக்கு எளிதில் மாறிச் செல்லலாம். நீங்கள் பதிவு செய்யும் விற்பனையாளர் எஸ்பி குழுமத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு இந்த மாற்றத்தை உங்களுக்காகச் செய்து கொடுப்பார்.

## விற்பனையாளரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாக என்ன செய்யவேண்டும்

விற்பனையாளருக்கு மாறுவதா அல்லது எஸ்பி குழுமத்துடனே இருப்பதா எனத் தீர்மானிப்பதற்கு முன்பாக நீங்கள் பின்வருபனவற்றைச் செய்யலாம்:

### கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்திக்கொண்டு, உங்களுக்குள்ள தெரிவுகளைப் புரிந்துகொள்ளுங்கள்


திறந்த மின்சாரச் சந்தை எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் உங்களுக்கான தெரிவுகளையும் புரிந்துகொள்ள, நீங்கள் **www.openelectricitymarket.sg** இணையத்தளத்திற்குச் செல்லலாம். நீங்கள் விற்பனையாளருக்கு மாறினாலும், உங்களது மின்சார விநியோகம் எப்படி மாற்றமில்லாமல் இருக்கிறது என்பதையும், உங்கள் ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு மறுபடியும் எஸ்பி குழுமத்திற்கு மாறிச்செல்வது எப்படி என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.
நீங்கள் யாருடனாவது நேரடியாகப் பேச விரும்பினால், **1800-233-8000** என்ற நேரடித் தொலைபேசி எண்ணை அழைத்து உதவி பெறலாம்.

### விலைத் திட்டத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாக ஒப்பிட்டுப் பாருங்கள்

விற்பனையாளர்கள் வழங்கும் வெவ்வேறு வழக்கமான விலைத் திட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்க **http://compare.openelectricitymarket.sg** இணையத்தளத்திற்குச் செல்லுங்கள். மாறாக, வெவ்வேறு விற்பனையாளர்களை அணுகி அவர்கள் வழங்கும் விலைத் திட்டங்கள் பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள். எந்த விலைத் திட்டம் உங்களுக்கு ஆகப் பொருத்தமானது என்பதைத் தீர்மானிக்க, விலைத் திட்டத்தின் விவரக் குறிப்பையும் படித்துப் பாருங்கள். ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்பாக நீங்கள் அறியவேண்டிய முக்கியமான தகவல்களைக் கொண்ட பயனீட்டாளர் ஆலோசனை அறிக்கையையும் நீங்கள் படிப்பது அவசியம்.


## உங்களுக்குக் கிடைக்கும் மின்சாரம் எங்கிருந்து, எப்படி உங்களை வந்தடைகிறது என யோசித்ததுண்டா?

சிங்கப்பூரிலுள்ள மின்சார உற்பத்தி நிறுவனங்கள் பெரும்பாலும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தியே மின்சாரம் உற்பத்தி செய்கின்றன. இந்த மின்சாரம், எஸ்பி குழுமம் இயக்கும் தேசிய மின் கட்டமைப்பின் மூலமாகக் குடும்பங்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்படுகிறது.



**மின் ஆலைகள்**

மின் ஆலைகளில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.




**மின் கட்டமைப்பு**

தேசிய மின் கட்டமைப்பை இயக்கும் எஸ்பி குழுமம், அனைவருக்கும் மின்சாரம் விநியோகிக்கிறது.



**பயனீட்டாளர்கள்**

பயனீட்டாளர்கள் எஸ்பி குழுமத்திடமிருந்து அல்லது விற்பனையாளரிடமிருந்து மின்சாரம் வாங்கலாம்.




அல்லது

SPgroup

**மின்சார விற்பனையாளர்கள்**

பயனீட்டாளர்கள் தங்களது தேவைகளுக்கு ஆகப் பொருத்தமான விலைத் திட்டத்தில் மின்சாரம் வாங்குகிறார்கள்.

**எஸ்பி குழுமம்**

பயனீட்டாளர்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தில் மின்சாரம் வாங்குகிறார்கள்.

மேற்காணும் வரைபடம் விளக்கமளிக்கும் நோக்கத்திற்கானது மட்டுமே.




## அடுத்த வாரம் வரவிருப்பது...

விற்பனையாளருக்கு மாறிச்செல்வது எப்படி என்பது பற்றியும், விற்பனையாளரிடம் பதிவு செய்யும்போது நீங்கள் எவற்றையெல்லாம் கவனிக்கவேண்டும் என்பது பற்றியும் மேலும் தெரிந்துகொள்ளலாம்.

திறந்த மின்சாரச் சந்தை பற்றி மேலும் தெரிந்துகொள்ள, **www.openelectricitymarket.sg** இணையத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது **1800-233-8000** என்ற எண்ணை அழையுங்கள்.

open electricity market
The Power to Choose

Energy Market Authority
Smart Energy, Sustainable Future

# திறந்த மின்சாரச் சந்தை


## உங்கள் தேவைகளுக்கு ஆகப் பொருத்தமான விலைத் திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்!

திறந்த மின்சாரச் சந்தையின் அறிமுகத்துடன், நீங்கள் உங்களது தேவைகளுக்கு ஆகப் பொருத்தமான விலைத் திட்டத்தில் மின்சார விற்பனையாளரிடமிருந்து மின்சாரம் வாங்கலாம், அல்லது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தில் எஸ்பி குழுமத்திடமே தொடர்ந்து மின்சாரம் வாங்கலாம். நீங்கள் யாரிடமிருந்து மின்சாரம் வாங்கினாலும், உங்களது மின்சார விநியோகம் எப்போதும் போலவே இருக்கும்.

## நீங்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய வழக்கமான விலைத் திட்டங்கள்

நீங்கள் விற்பனையாளருக்கு மாறத் திட்டமிட்டால், இரு வகையான வழக்கமான விலைத் திட்டங்களிலிருந்து (நிலையான விலைத் திட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தில் தள்ளுபடி வழங்கும் திட்டம்) ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். அனைத்தும் உள்ளடங்கும் மின்சாரக் கட்டண விகிதங்களை இத்திட்டங்கள் வழங்குகின்றன. அதாவது, விற்பனையாளர் நிர்ணயித்துக் கூறும் கட்டண விகிதத்தை நீங்கள் செலுத்துவீர்கள். நிலையான விலைத் திட்டங்கள் 6, 12 அல்லது 24 மாத கால ஒப்பந்தத்துடனும் வழங்கப்படுகின்றன.

### 1 நிலையான விலைத் திட்டம்





உங்களது ஒப்பந்தக் காலகட்டம் முழுவதும் **நிலையான கட்டண விகிதம்** செலுத்துவீர்கள். இந்தக் கட்டணம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தைவிட அதிகமாக அல்லது குறைவாக இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, உங்களது மாதாந்தரக் கட்டணம் பின்வருமாறு இருக்கலாம்





x 400 kWh*
(ஒரு மாதத்தில் பயன்படுத்தியது)
= $77.20
(பொருள் சேவை வரிக்குமுன்)

### 2 ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தில் தள்ளுபடி வழங்கும் திட்டம்




உங்களது ஒப்பந்தக் காலகட்டம் முழுவதும் **நிலையான தள்ளுபடியை** அனுபவிக்கலாம். ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணம் மாறும்போது கட்டண விகிதமும் மாறும்.

எடுத்துக்காட்டாக, உங்களது மாதாந்தரக் கட்டணம் பின்வருமாறு இருக்கலாம்




x 400 kWh*
(ஒரு மாதத்தில் பயன்படுத்தியது)
= $77.20
(பொருள் சேவை வரிக்குமுன்)

புள்ளிவிவரங்களும் வரைபடங்களும் விளக்கமளிக்கும் நோக்கத்திற்கானவை மட்டுமே.
* கால நேரப்படி நீங்கள் பயன்படுத்தும் மின்சாரத்தை அளவிடுவதற்கு மணி நேரக் கிலோவாட் (kWh) பயன்படுத்தப்படுகிறது.

## நான் எந்தத் திட்டத்தைத் தேர்ந்தெடுப்பது?

நீங்கள் மின்சாரப் பயன்பாட்டுக்குச் செலுத்தும் கட்டண விகிதத்தில் நிச்சயத்தன்மையை விரும்பினால் நிலையான விலைத் திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள். அல்லது, கட்டண விகிதம் காலாண்டுக்கு ஒருமுறை மாறினாலும், நடப்பிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தைவிட நீங்கள் செலுத்தும் கட்டண விகிதம் குறைவாக இருப்பதை விரும்பினால், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணத்தில் தள்ளுபடி வழங்கும் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

விற்பனையாளருக்கு மாறிச் செல்வதற்குக் காலக்கெடு இல்லை என்பதால், நீங்கள் விலைத் திட்டங்களைப் பற்றி மேலும் தெரிந்து கொண்டபிறகு தீர்மானம் எடுக்கலாம்.

## விற்பனையாளருக்கு மாறிச்செல்வது எளிது

### மாறிச் செல்வதற்கான படிநிலைகள்

#### 1 விலைத் திட்டங்களை ஒப்பிடுங்கள்

உங்கள் தேவைகளுக்கு ஆகப் பொருத்தமான விலைத் திட்டத்தைக் கண்டறிந்து ஒப்பிட்டுப் பார்க்க compare.openelectricitymarket.sg இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்.

#### 2 விற்பனையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்

நீங்கள் தேர்ந்தெடுக்கும் விற்பனையாளருடன் தொடர்புகொண்டு, நீங்கள் ஆர்வம் கொண்டுள்ள விலைத் திட்டம் பற்றிய மேல்விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். தொடர்பு விவரங்கள் www.openelectricitymarket.sg இணையத்தளத்தில் கிடைக்கும்.

#### 3 நீங்கள் தேர்ந்தெடுக்கும் விற்பனையாளரிடம் பதிவு செய்யுங்கள்

உங்களது விற்பனையாளர் எஸ்பி குழுமத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு உங்களுக்காக மாற்றத்தைச் செய்து கொடுப்பார். உங்களது விற்பனையாளர் நீங்கள் செய்யும் மாற்றத்தைப் பற்றி எஸ்பி குழுமத்திடம் தெரியப்படுத்தியவுடன், ஆகக் குறைவாக 5 வேலை நாட்களுக்குப் பிறகிலிருந்து உங்கள் ஒப்பந்தம் நடப்புக்கு வரும்.

### நீங்கள் கவனிக்க வேண்டியவை

- நீங்கள் தேர்ந்தெடுக்கும் விலைத் திட்டத்தின் விவரக் குறிப்பை முழுமையாகப் படித்துப் பாருங்கள். விலை, ஒப்பந்தக் காலம், முன்கூட்டியே ரத்து செய்வதற்கான கட்டணங்கள், தானாகப் புதுப்பிப்பு செய்வதற்கான நிபந்தனைகள் போன்ற முக்கிய விவரங்கள் அதில் இருக்கும்.
- சில விற்பனையாளர்கள் உங்களிடமிருந்து பாதுகாப்பு வைப்புத்தொகை பெறக்கூடும். இந்தத் தொகை உங்களது சராசரி மாதாந்தர மின்சாரக் கட்டணத்தைவிட இருமடங்கு மேலாக இருக்கக்கூடாது. ஒப்பந்தம் முடிவடையும்போது அல்லது விற்பனையாளர் தொழிலை நிறுத்தும்போது பாதுகாப்பு வைப்புத்தொகை உங்களிடம் திருப்பித் தரப்படும்.
- ஒப்பந்தத்திலுள்ள ஏதேனும் பகுதி உங்களுக்குத் தெளிவாகப் புரியாவிட்டால், அதற்கு விளக்கமளிக்குமாறு விற்பனையாளரிடம் கேளுங்கள்.
- ஒப்பந்தத்தின் பிரதியை உங்கள் தேவைக்காக வைத்துக் கொள்ளுங்கள்.

திறந்த மின்சாரச் சந்தை
விரைவில் வருகிறது!



உங்களது விற்பனையாளர், உங்கள் ஒப்பந்தம் காலாவதியாவதற்குக் குறைந்தது 10 வேலை நாட்களுக்கு முன்பாக, உங்களிடம் தெரியப்படுத்துவார். அதன்பிறகு நீங்கள் செய்யக்கூடியவை:

- தற்போதைய திட்டத்திற்கு அல்லது புதிய திட்டத்திற்கு மீண்டும் ஒப்பந்தம் செய்யலாம்; அல்லது
- புதிய விற்பனையாளருக்கு மாறலாம்; அல்லது
- எஸ்பி குழுமத்திற்குத் திரும்பிச் சென்று ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டணம் செலுத்தலாம்

திறந்த மின்சாரச் சந்தை பற்றி மேலும் தெரிந்துகொள்ள, **www.openelectricitymarket.sg** இணையத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது **1800-233-8000** என்ற எண்ணை அழையுங்கள்.

open electricity market | The Power to Choose

Energy Market Authority
Smart Energy, Sustainable Future